மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத்தான் முன்னரே நான் சொன்னேன். சிறிய தொழிலதிபர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் இதிலே சட்டவிரோதமாக நடக்கமுடியாது என்ற காரணத்தினாலே அவர்கள் அந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்கிறார்கள். சட்டவிரோதமாகத் தப்புகிறார்கள் என்ற வாதத்தை மத்திய அரசாங்கம் வைக்கிறது. நடைமுறையிலே அப்படிச் செய்ய முடியாது என்று சொல்லி பெரிய பணக்காரர்கள் தொழில் செய்கிறவர்கள்கூட அந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள் என்ற காரணத்தினால்தான் மத்திய அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது.

திரு. செ. கந்தப்பன் : அந்த வட்டாரத்தைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தலைமை வகித்து மாபெரும் போராட்டம் நடத்தப்போவதாகச் செய்தி வந்ததே? அது நடந்துகொண்டிருக்கிறதா, அதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் அதற்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் போராடப்போகிறோம் என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினரே சொல்லியிருப்பதாக பத்திரிகையிலே அறிக்கை வந்தது. அது அவர்களுடைய அரசாங்கம். அவர்கள் அவர்களோடு போராடுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

விசைத்தறிகள்

* 557 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலங்கை, பர்மா அகதிகளுக்கு வேலை அளிப்பதற்காக இராமநாதபுரம், கோவை, நெல்லை, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் கூட்டுறவுத் துறையில் விசைத்தறி ஆலைகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த விசைத்தறி ஏற்படுத்தும்போது எந்த எந்த அடிப்படையிலே அகதிகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதை விவரங்களோடு கூற முடியுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1972 மார்ச் 18]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வெளிநாடுகளிலிருந்து வருகின்ற அகதிகளுக்கு தனியாகத் திட்டம்போட்டு மத்திய அரசாங்கம் உதவிசெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த மாக 94 லட்சம் ரூபாய் அளவிற்குத் திட்டமிடப்பட்டு, சப்சிடி என்ற முறையிலே 20 லட்சம் ரூபாய் கொடுப்பதாக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்களைப்பற்றி இன்னும் முடிவு எடுக்க வில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த விசைத்தறிகள் புகுத்தப்படுவதால் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுமட்டு மல்லாமல் அந்தக் கைத்தறித் தொழில் இந்த விசைத்தறிகளோடு போட்டிபோட முடியாமல் இருக்கிறது. விசைத்தறிகளுக்கு 4 அணு, 6 அணு குறைவாகக் கொடுக்கப்படுவதால் கைத்தறித் தொழில் பாதிக்கப்படுகிறது. ஆகவே, விசைத்தறிகள் 36 இஞ்சுக்கு உட் பட்டவைகளைத்தான் உற்பத்தி செய்யவேண்டுமென்றும் கரை போட்ட துணிகளை உற்பத்தி செய்யக்கூடாது என்ற கோரிக்கை சொல்லப்படுகிறது. அதை அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சொல்லப்படுகிறது; பாதிக்கப் படுகிறது என்று நாம் தென் மாவட்டங்களில் பேசிக்கொண்டிருக் கிறோம். ஆனால் வட மாவட்டங்களில் ஏகக் கிராக்கி இருப்பதாக பல அங்கத்தினர்கள் விசைத்தறிகளைப்பற்றிக் கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய கருத்தாகும். ஆகவே, நெசவாளர்கள் பாதிக்கப்படாமல் பாதுகாத்துக் கொள்ளத்தான் கூட்டுறவுத் துறைக்குக் கொடுப்பது, நெசவு செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுப்பது, மாஸ்டர் வீவர்ஸ்க்குக் கொடுப்பதில்லை என்ற முடிவு அரசுக்கு இருக்கிறது.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, பர்மா அகதிகள் நெல்லை மாவட்டத்தில் ஒட்டப்பிடாரத்திற்கு வருகிறார்கள். ஆனால் அவர்களில் சிலருக்கு விவசாயம் செய்வதற்கு நிலங்கள் ஒதுக்கப் பட்டும், சிலர் வியாபாரம் செய்ய வருகின்றனர். அது சிறிய கிராமம், வியாபாரம் செய்வதற்கு லாயக்கற்ற இடம். எனவே, வியாபாரம் செய்ய வசதிகளைச் செய்து அவர்களை உடனடியாக வேறு பெரிய நகரங்களுக்கு அனுப்பவேண்டும். இல்லையென்றால் இனிமேலாவது மத்திய சர்க்காரிடம், ஒட்டப்பிடாரத்திற்கு வராமல் இருக்க வேண்டுமென்று மாநில அரசு சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நெல்லை மாவட்டத்திற்கு 29 இலட்சம் ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் நல்லமுறையிலே செயல்பட்டு வருகின்றன. அவைகளை காம்போசிட் மில்களாக மாற்றியமைக்க யோசனை உண்டா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் இருக்கிறதே.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதைக்கு இல்லை.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்காக நெல்லை மாவட்டத்தில் வேம்பார் பகுதியிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் சில இடங்களிலும் உப்பளங்கள் அமைப்பது சம்பந்தமாக அரசின் பரிசீலனையில் ஒரு திட்டம் இருந்தது. அது இப்பொழுது எந்த நிலையிலுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது விசைத்தறி பற்றிய கேள்வி.

திரு. த. சோனையா : துணைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இலங்கை, பர்மாவிலிருந்து வரும் அகதிகள் ஏராளமாக இருக்கிறார்கள். அந்த மாவட்டத்திற்கு இந்த விசைத்தறிகள் எந்த ஊரிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கிட்டத்தட்ட 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இடங்கள் பின்னால் தேர்வு செய்யப்படும்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற ஆலையில் இந்த அகதிகளுக்கு இந்த நல அகதிகள் புனர் வாழ்வு இலாகா ஸ்பின்னிங் பயிற்சி தந்து, அவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி பெறும்பொழுது மாதம் ஒன்றுக்கு 120 ரூபாய் தரப்படுகிறது.

1972 மார்ச் 18]

பயிற்சிபெற்ற பிறகு பணியில் அமர்த்த அரசு பொறுப்பேற்று வேலை தருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறைய அகதிகளுக்கு பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, இலங்கையிலிருந்து வரும் அகதிகளுக்கு உதவி செய்யும் வகையில் விசைத்தறி ஆலைகள், குறிப்பாக வடார்க்காடு மாவட்டத்தில் அமைக்க இருப்பதாக அறிகிறேன். அது எந்தப் பகுதியில் என்று அறியலாமா? அதோடு, பொதுவாக கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் போளூர், வடபாதிமங்கலம், மாம்பட்டு போன்ற இடங்களில் ஆரம்பிக்க ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இடங்கள் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்று ஏற்கனவே சொன்னேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது இந்த அகதிகளுக்காக 94 இலட்சம் ரூபாய் செலவிடப்பட இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இதிலே எவ்வளவு பவர் லூம்ஸ் அடங்கும் என்று அறிவிப்பார்களா? அதே நேரத்தில் வட மாநிலங்களில் நிறைய இருக்கிறது, தென் மாநிலங்களில் மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, யார் வேண்டுமானாலும் இப்படிப்பட்ட பவர் லூம்களை வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டால் அனுமதி அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம் 750 பவர்லூம்ஸ், 95 இலட்சம் ரூபாய்க்கு. மாஸ்டர் வீவர்ஸ் தவிர வேறு எல்லோருக்கும் கொடுக்கலாம்.

Salt manufacturers in Tuticorin

* 558. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have given some assurance to Salt Manufacturers of Tuticorin about 28th October, 1971; and

(*b*) if so, the details thereof?